# மங்கையந்தாதி

பதிப்பாளர்

எ. பச்சையப்பன்

தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை - 600 005.
2007

# மங்கையந்தாதி

சுவடியியலும் பதிப்பியலும் என்ற பட்டயப்
பேற்றிற்காகச் சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு
அளிக்கப்பெறும் பதிப்பேடு

பதிப்பாளர்
**எ. பச்சையப்பன்**

நெறியாளர்
**முனைவர் ய. மணிகண்டன்**
**விரிவுரையாளர்**

**தமிழ் இலக்கியத்துறை**
**சென்னைப் பல்கலைக்கழகம்**
**சென்னை - 600 005.**
**2007**

"சுவடியியலும் பதிப்பியலும்"

பட்டயப் பேற்றிற்காகச்

சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு

அளிக்கப்பெறும் பதிப்பேடு

எண்:53010626

# நெறியாளர் சான்றிதழ்

**முனைவர் ய. மணிகண்டன்,**
விரிவுரையாளர்,
தமிழ் இலக்கியத்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை - 600 005.

**"மங்கையந்தாதி"** எனும் தலைப்பிலான ஓலைச்சுவடியை, சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத் துறையில் நடைபெற்றுவரும் **'சுவடியியலும் பதிப்பியலும்'** எனும் பட்டயம் பெறுவதற்காக **எ.பச்சையப்பன்** அவர்கள் 2006-07ஆம் கல்வி ஆண்டில் எனது மேற்பார்வையில் பதிப்புச் செய்தார் என்றும், இப்பதிப்பேடு இவர்தம் சொந்த முயற்சியில் உருவானது என்றும் சான்றளிக்கிறேன்.

நெறியாளர்

ய. மணிகண்டன்

(ய. மணிகண்டன்)

இடம்: சென்னை-5.
நாள்: - -2007

# பதிப்பாளர் உறுதிமொழி

**எ. பச்சையப்பன்,**
முதுகலை இரண்டாம் ஆண்டு,
தமிழ் மொழித்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை - 600 005.

**"மங்கையந்தாதி"** எனும் தலைப்பிலான ஓலைச்சுவடியை, சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத்துறையில் நடைபெற்றுவரும் **'சுவடியியலும் பதிப்பியலும்'** எனும் பட்டயம் பெறுவதற்காக 2006-07ஆம் கல்வி ஆண்டில் முனைவர் **ய.மணிகண்டன்** அவர்களின் மேற்பார்வையில் பதிப்புச் செய்தேன் என்றும் இப்பதிப்பேடு என் சொந்த முயற்சியில் உருவானது என்றும் உறுதியளிக்கிறேன்.

பதிப்பாளர்

இடம்: சென்னை-5.
நாள்: - -2007

எ. பச்சையப்பன்.

(எ. பச்சையப்பன்)

# உள்ளடக்கம்


| இயல் | | பக்கம் |
|---|---|---|
| 1 | நன்றியுரை | 01-04 |
| 2. | பதிப்புரை | 05-16 |
| 3. | நூல் - மங்கையந்தாதி | 17-55 |
| 4. | பின்னிணைப்பு | |
| | 4.1 செய்யுள் முதற் குறிப்பகராதி | 56-61 |
| | 4.2 சொல்லடைவு | 62-83 |
| | 4.3 அருஞ்சொற்பொருள் | 84-87 |
| | 4.4 சுவடி - விவர அட்டவணை | 88-89 |
| 5. | துணைநூற்பட்டியல் | 90 |

# நன்றியுரை

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு. (குறள்-110)

தமிழகத்தின் அன்னைப் பல்கலைக்கழகமாம் சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு எனது முதற்கண் வணக்கத்தையும் நன்றியையும் செலுத்தக் கடமைப் பட்டுள்ளேன்.

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் மொழித்துறையில் முதுகலை படிக்க வாய்ப்பளித்த முன்னாள் துறைத்தலைவர் என் இனிய ஆசான் பேராசிரியர் வ.ஜெயதேவன் ஐயா அவர்களுக்கும், எனக்குப் பல வகைகளில் வழிகாட்டியாகவும் முன்னோடியாகவும் திகழ்ந்து பல நிலைகளில் உதவி நல்கிய அன்பு உள்ளம் கொண்ட பேராசிரியர் ந.தெய்வசுந்தரம் ஐயா அவர்களுக்கும், பார்க்குந்தோறும் ஆலோசனைகளை வழங்கி என்னை வழிப்படுத்திய பேராசிரியர் மு. பொன்னுசாமி ஐயா அவர்களுக்கும் எனது உளமார்ந்த நன்றியினை உரித்தாக்குகின்றேன்.

எனக்குப் பலவகைகளில் உறுதுணையாக நின்று சிறந்த அறிவுரைகளை வழங்கிய முனைவர் அ.பாலு ஐயா அவர்களுக்கும், எனது இதயத்தில் என்றென்றும் நிலைத்த இடம் பிடித்த பழகுதற்கினியப் பண்புள்ளம் கொண்ட முனைவர் அ.கோபால் ஐயா அவர்களுக்கும் அன்பார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"சுவடியியலும் பதிப்பியலும்" எனும் பட்டயப் படிப்பில் சேர அனுமதி நல்கிச் சிறந்த முறையில் வகுப்பு நடத்திய தமிழ் இலக்கியத் துறைத் தலைவர் எனது மனம் கவர்ந்த பேராசிரியர் வீ.அரசு ஐயா அவர்களுக்கு எனது நன்றியை உரித்தாக்குகிறேன்.

சுவடியியல் மற்றும் அதன் பதிப்பு நெறிமுறைகள் பற்றிய கருத்துகளை வழங்கி யாப்பு பற்றிய செய்திகளை மிகத் தெளிவாக உணர்த்தி, எனது இப்பதிப்பு நூல் வெளிவருவதற்குப் பல்வேறு வகைகளில் ஆலோசனைகளை வழங்கி எனக்கு உறுதுணையாக நின்ற எனது நெறியாளர் முனைவர் ய.மணிகண்டன் அவர்களுக்கு என் நன்றி என்றென்றும் உரியது.

முனைவர் கோ. பழனி, முனைவர் அ. ஏகாம்பரம் அவர்களுக்கும், நாடும் தோறும் நட்புடன் உதவிய தமிழ்மொழி மற்றும் இலக்கியத்துறை அலுவலர்கள் திரு. சந்திரபாபு, திரு. துளசிபாலன், திரு. சங்கரன்,

திரு. சுந்தர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவிக்கிறேன்.

நான் பதிப்பிப்பதற்குரிய ஓலைச் சுவடியை நல்கிய சென்னைப் பல்கலைக்கழகத்தில் உள்ள அரசினர் கீழ்த்திசை சுவடிகள் நூலகத்திற்கும், அந்நூலகத்தின் காப்பாட்சியர் முனைவர் ச. சவுந்திரபாண்டியன் அவர்களுக்கும் எனது நன்றியை உரித்தாக்குகிறேன்.

அல்லும் பகலும் அயராது உழைத்து என்னை இத்தகைய நிலைக்கு உயர்த்தியவர்களும், நாள்தோறும் நான் வணங்கும் கடவுளாகத் திகழ்பவர்களுமான என் பெற்றோரின் பாதங்களைத் தொட்டு அவர்களுக்கு நன்றியைச் செலுத்துகிறேன். இன்றுவரையிலும் எனக்காக நாள்தோறும் வியர்வை சிந்தும் என் அக்கா எ.லட்சுமி, தங்கை எ.நதியா ஆகியோருக்கு என்றென்றும் நன்றியுடையவனாகின்றேன். உற்ற காலத்தில் எனக்குத் துணையாக உதவிய என்றும் என் அன்பிற்குரிய விஜயலட்சுமிக்கு நன்றி!

நான் பிறந்து மொழி பயின்றது முதல் எனது வாழ்க்கையை வளமைப்படுத்திய அனைத்து ஆசிரியப் பெருமக்களுக்கும் எனது உயிருக்கு இணையான எனது தோழர்கள், தோழியர்கள் அனைவருக்கும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.

இவ்விலக்கியத்தைக் கணிணியில் அச்சிட்டு நூலாக்கம் செய்ய உதவிய டுடே கிராஃபிக்ஸ் உரிமையாளர் அன்பிற்குரிய அண்ணன் திரு. ரெ. பாபு அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்றும் அன்புடன்

எ. பச்சையப்பன்

# பதிப்புரை

தமிழில் இலக்கியங்கள் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளாக, காலந்தோறும் பல்வேறு பாடுபொருள்களில் பாடப்பட்டு வருகின்றன. மனிதனுக்குள் இயல்பாக ஏற்படும் ஒருவகையான துடிப்பும், தூண்டலும், உணர்ச்சியுமே இலக்கியங்கள் தோற்றம் பெறக் காரணமாகின்றன. காலந்தோறும் படைக்கப்பெறும் இலக்கியங்களின் யாப்பும், அமைப்பும், பாடுபொருளும் மாற்றமடைவதற்குச் சமூகச் சூழல், அரசியல் பின்னணி, இயற்கையின் தன்மை ஆகிய மூன்றுமே அடிப்படைக் காரணங்களாகின்றன. இந்த மூன்றையும் அடிப்படையாக வைத்துதான் காலந்தோறும் இலக்கியங்கள் தோற்றம் பெறுகின்றன என்பதனை இலக்கிய வரலாற்றைப் படிப்பதன் மூலம் அறியலாம். இதன் அடிப்படையில்தான் ஒவ்வொரு காலங்களிலும் அக்காலத்திற்கு ஏற்றாற்போன்ற சில கருத்துகள் ஆழ்ந்து வலியுறுத்தப்படுகின்றன.

தமிழ் இலக்கிய வகைகளுள் சிற்றிலக்கியம் என்பதும் ஒன்றாகும். சிற்றிலக்கியத்தை வட மொழியில் 'பிரபந்தம்' என்ற சொல்லால் வழங்குவர். பிரபந்தம் என்ற

சொல்லுக்கு 'நன்கு கட்டப்பட்டது' அல்லது 'நன்கு யாக்கப்பட்டது' என்பது பொருளாகும். சிற்றிலக்கியங்கள் அல்லது பிரபந்தங்களுக்குரிய இலக்கண வரையறைகளை பாட்டியல் நூல்கள் (பன்னிரு பாட்டியல், வெண்பாப் பாட்டியல், நவநீதப் பாட்டியல்... போன்றவை) தெளிவாகச் சுட்டுகின்றன. இப்பாட்டியல் நூல்கள் கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டு முதல் காணக்கிடைக்கின்றன.

'தொண்ணூற்றாறு வகை சிற்றிலக்கியங்கள்' என்ற மரபு வழங்கப்பட்டு வந்த போதிலும் இன்று நூற்றுக்கும் மேற்பட்ட சிற்றிலக்கிய வகைகள் காணக் கிடைக்கின்றன. இத்தொண்ணூற்றாறு வகை சிற்றிலக்கியங்களுள் ஒன்றுதான் அந்தாதி என்பதாகும். எண்ணற்ற சிற்றிலக்கிய வகைகள் இருந்தாலும் அன்றும் இன்றும் சிறந்து விளங்குவதும், அறிஞர்களாலும், புலவர்களாலும் போற்றப்படுவதும், பாடப்படுவதும் அந்தாதி, ஆற்றுப்படை, உலா, கலம்பகம், கோவை, குறவஞ்சி, சதகம், பரணி, பள்ளு, பிள்ளைத்தமிழ், தூது போன்றவையேயாகும்.

## அந்தாதி - வரையறை

"அந்தாதி என்பது நூலின் ஒவ்வொரு பாடலிலும் இறுதியில் உள்ள எழுத்து, அசை, சொல், சீர், அடி ஆகிய இவற்றுள் யாதானும் ஒன்று அடுத்த பாடலின் முதலாக வரும்படி அமைத்துப்பாடி, இறுதிப் பாடலின் முடிவும் முதற் பாடலின் தொடக்கமும் ஒன்றாக இணையும்படி மண்டலித்து, மாலை போலத் தொடுத்துப் பாடப்பெறும் யாப்பு வகையிலமைந்த ஒரு வகைச் சிற்றிலக்கியம்"[1]

அந்தாதி இலக்கியம் எனப் பொதுநிலையில் பெயர் பெற்றிருப்பினும் பயின்றுவரும் பல்வேறு யாப்புப் பிரிவுகளுக்கேற்ப, அந்தாதி இலக்கியமும் பல்வேறு வகையினவாக விளங்குகின்றது. வெண்பா அந்தாதி, கலித்துறை அந்தாதி, பதிற்றுப் பத்தந்தாதி, நூற்றந்தாதி, ஒலியலந்தாதி, கலியந்தாதி, சிலேடையந்தாதி, திரிபந்தாதி, யமக அந்தாதி போன்றவை அந்தாதியின் வகைகளாகும்.

---

1. சிற்றிலக்கியச் செல்வம், ந.வி. செயராமன், ப. 46.

## அந்தாதி - இலக்கண இலக்கிய வித்து

அந்தாதி எனப்படும் சிற்றிலக்கிய வகை தொல்காப்பியர் குறிப்பிடும் செய்யுளுக்குரிய எண்வகை வனப்புகளுள் "விருந்து" எனும் வகையினுள் அடங்கும். இதைப் பேராசிரியர்,

"விருந்தே தானும்

புதுவது கிளந்த யாப்பின் மேற்றே"[2]

என்ற நூற்பாவை அடிப்படையாக வைத்து விளக்கிக் குறிப்பிட்டுள்ளார்.

தொல்காப்பியத்துக்குப் பின்னர் தோன்றிய சங்க இலக்கியங்களான புறநானூறு[3], பதிற்றுப்பத்து[4], ஐங்குறுநூறு[5], நற்றிணை[6], சிறுபாணற்றுப்படை[7] போன்ற நூல்களுள்ளும் அந்தாதி அமைப்பில் அமைந்த பாடல்கள்

---

2. தொல்காப்பியம்.
3. புறநானூறு-2.
4. பதிற்றுப்பத்து - 4ஆம் பத்து.
5. ஐங்குறுநூறு - 118ஆம் பத்து.
6. நற்றிணை -95.
7. சிறுபாணாற்றுப்படை, ப. 28.

காணப்படுகின்றன. சங்கம் மருவிய காலத்தில் தோன்றிய சிலப்பதிகாரத்திலும்[8] அந்தாதியின் சாயலையும், போக்கையும் காணமுடிகிறது.

அந்தாதி இலக்கியத்திற்கான வித்து தொல்காப்பியத்திலும், சங்க இலக்கியங்களிலும் காணப்படினும், அந்தாதி இலக்கியம் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில்தான் காரைக்காலம்மையாரால் தனியொரு சிற்றிலக்கியக்கியமாக உருவாக்கப்பெற்றது. அவர் இயற்றிய அற்புதத் திருவந்தாதி எனும் நூல்தான் தமிழ் மொழியில் எழுந்த முதல் அந்தாதி நூலாகும்.

## அந்தாதி - யாப்புச் சிறப்பு

"அந்தம் முதலாகத் தொடுப்பதந்தாதி"[9] ஆகும். இது வெண்பாவிலேனும், கட்டளைக் கலித்துறையாலேனும் பாடப்பெறும். "வெண்பாக் கலித்துறை வேண்டிய பொருளிற் பண்பாய் உரைப் பதந்தாதித் தொகையே"[10] என்கிறது பன்னிருபாட்டியல்.

---

8. சிலப்பதிகாரம் - கானல்வரி 2-4, 9-13, 20-23, 25-27.
9. யாப்பருங்கலக்காரிகை
10. பன்னிருபாட்டியல்.

"அந்தாதி என்னும் சிற்றிலக்கியத்தில் பொருட் சிறப்பினைவிட யாப்புச் சிறப்பே மிகுதியாகும். எனவே அந்தாதி இலக்கிய வகையை யாப்பமைப்பால் பெயர் பெற்ற சிற்றிலக்கியம் என்று கூறுதல் பிழையாகாது."[11]

பல்வகை யாப்புகள் கலந்து பாடப்படும் தன்மையுடைய அந்தாதி இலக்கியம் ஒன்றே சிற்றிலக்கியங்ளுள் அதிகமான எண்ணிக்கையில் வளர்ந்துள்ளது. இதுகாறும் தமிழில் இருநூற்று நாற்பத்தைந்து (245) அந்தாதி நூல்கள் தோற்றம் பெற்றுள்ளதாக ந.வி. செயராமன் அவர்கள் பட்டியலிட்டு காட்டியுள்ளார்.[12]

கி.பி. பதினேழாம் நூற்றாண்டு வரையிலும் தமிழில் தோன்றிய இலக்கியங்களனைத்தும் பெரும்பாலும் ஓலைச் சுவடிகளில்தான் எழுதி வைக்கப்பட்டன. அறிவியல்துறையின் வளர்ச்சி காரணமாக அச்சு

11. சிற்றிலக்கியச் செல்வம், ந.வீ. செயராமன். ப. 47

12. சிற்றிலக்கியச் செல்வம், ந.வீ. செயராமன். பக்.196-208

இயந்திரங்களும், தாள்களும் உருவாக்கப்பட்ட பிறகு சுவடி நிலையில் உள்ள இலக்கியங்களெல்லாம் படிப்படியாக அச்சு வடிவில் பதிக்கப்பட்டன. தமிழில் பல அரிய நூல்களைப் பதிப்பித்து பதிப்புத் துறையில் முன்னோடியாகத் திகழ்ந்தவர்கள் உ.வே. சாமிநாதய்யர், சி.வை. தாமோதரம் பிள்ளை போன்றோர் ஆவர்.

மேலும் பல நூல்கள் பதிப்பிக்கப்படாமல், தெளிவானப் பதிப்பில்லாமல், ஓலைச்சுவடி நிலையிலும், தாள் சுவடி நிலையிலும் காணப்படுகின்றன. இவற்றையெல்லாம் கண்டறிந்து பதிப்பிக்கும் முயற்சியில் தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகம், சரசுவதி மகால் நூல்நிலையம் போன்ற நிறுவனங்கள் முனைந்து ஈடுபட்டுள்ளன.

## சுவடி விவரம்

"மங்கையந்தாதி" எனும் ஓலைச்சுவடி சென்னைப் பல்கலைக்கழகத்தில் உள்ள "அரசினர் கீழ்த்திசை சுவடிகள் நூலகத்தில்" R. 5019 (T.R. 21887) என்ற வரிசை எண்ணில் உள்ளது. இச்சுவடியின் பதிப்பாக இந்நூல் அமைகிறது.

இந்த ஓலைச் சுவடியிலிருந்து படி எடுக்கப்பட்ட கையெழுத்துப்படியிலான தாள்சுவடி ஒன்றும் கிடைக்கிறது. இந்த தாள்சுவடியை கே. தனராஜ் என்பவர் 1954ஆம் ஆண்டு ஜூன் மாதம் பதிவு செய்ததாகத் தாள்சுவடியின் முன்பக்க குறிப்பின் மூலம் தெரிந்து கொள்ள முடிகிறது. இருபத்தேழு பக்கங்களைக் கொண்ட இத்தாள்சுவடி R 5341 என்ற வரிசை எண்ணில் அரசினர் கீழ்திசை சுவடிகள் நூலகத்தில் உள்ளது.

**சுவடி அமைப்பு**

கடவுள் வாழ்த்தாக அமைந்த இரண்டு பாடல்களையும் சேர்த்து மொத்தம் எண்பத்தெட்டுப் பாடல்கள் சுவடியில் காணப்படுகிறது. ஒரு பக்கத்தில் நான்கு வரிகளில் ஒரு பாடல்வீதம் ஓலைச் சுவடியின் இரு பக்கங்களிலும் பாடல் எழுதப்பட்டுள்ளது. ஓலைச்சுவடி ஆங்காங்கு சிதிலமடைந்து எழுத்துகள் தெளிவாகத் தெரியாத நிலையில் உள்ளன. அந்நிலையில் தாள் சுவடியைப் பார்த்து ஒப்பு நோக்கி பதிப்பு செய்யப்பட்டுள்ளது.

தாள் சுவடியிலும் பல இடங்களில் பிழைகள் காணப்பட்டுள்ளன. அவற்றையும் மூலத்துடன் ஒப்புநோக்கி

இயன்றவரைத் தெளிவாகப் பதிப்பிக்கப்பட்டுள்ளது. ஓலைச்சுவடியிலேயே சில இடங்களில் பாடபேதம் குறிப்பிடப்பட்டு, திருத்தமும் செய்யப்பட்டுள்ளது. அதுவும் அடிக்குறிப்பில் பாடபேதமாக குறிப்பிடப் பட்டுள்ளது. ஒவ்வொரு சுவடியிலும் பக்க எண் தமிழில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## யாப்பமைப்பு

ஓலைச் சுவடியில் எழுத்துகள் இடைவெளி இன்றித் தொடர்ச்சியாக எழுதப்பட்டுள்ளன. ஒற்றெழுத்துகள் புள்ளி வைத்து எழுதப்படவில்லை. குறில், நெடில் வேறுபாடு இல்லாமல் எழுதப்பட்டுள்ளது. சில இடங்களில் எழுத்துக்களின்மேல் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

ஓலைச்சுவடியில் சாற்றி - சாத்தி (9), மேற்ற - மேத்த (16) போன்ற பேச்சுவழக்குச் சொற்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன. மேலும் எழுத்து மாற்றங்களும் காணப்படுகின்றன. (உ-ம்) மொழி - மொளி (25).

தாள் சுவடியிலும் முறையாக யாப்பமைவுடன் பாடல் எழுதப்படவில்லை. ஓலைச்சுவடிக்கும், தாள் சுவடிக்கும்

இடையே சில இடங்களில் எழுத்து மாற்றத்தையும் சொல் மாற்றதையும் காணமுடிகிறது. இவற்றையெல்லாம் ஆராய்ந்து இப்பதிப்பில் இயன்ற அளவு திருத்தமுடன் வெளியிடப்பட்டுள்ளது. ஆசிரியவிருத்த யாப்பில் அமைந்துள்ள இந்நூற் செய்யுட்கள் யாப்பு அடிப்படையில் இப்பதிப்பில் பிரித்து அமைக்கப்பட்டுள்ளன.

## நூல் அமைப்பு

இந்நூல் இறைவணக்கத்துடன் தொடங்குகிறது. முதல் வாழ்த்துப்பாடல் விநாயகரையும் அடுத்தபாடல் திருமங்கை கரும்பேசுரர் எனும் கடவுளையும் போற்றுகிறது. நூல் முழுவதும் அந்தாதி அமைப்பில் அமைந்துள்ளது.

'திருமங்கை கரும்பேசுரர்' எனும் கடவுளை முதன்மைபடுத்தி இந்நூல் இயற்றப்பட்டுள்ளது. இது தோத்திர வடிவிலான அந்தாதி நூலாக அமைந்துள்ளது. இந்நூலினை இயற்றிய ஆசிரியர் பெயர். தெரியவில்லை. இயற்றப்பட்ட காலமும் குறிப்பிடப்படவில்லை. இந்நூலினுள் திருமுறைகள் பற்றிய செய்திகள் இடம் பெறுவதால் (பாடல் 09,55) திருமுறைகள்

தொகுக்கப்பட்ட காலமான கி.பி. 12-ஆம் நூற்றாண்டிற்கும் பிறபட்டது எனத் துணியலாம்.

சிவனைப் பற்றியும் அவனது அருட்செயல்கள் பற்றியும் குறிப்பிடுவதால் இதனை சைவசமயம் சார்ந்த நூலாகக் கருதலாம்.

பாடல் தோறும் இறைவனின் (சிவன்) பல்வேறு அருட்செயல்களையும், அவனது தன்மையினையும் கூறிப் போற்றிப் புகழ்ந்து இறுதியில் தமக்கு அருள்வாய், தம்மை ஆட்கொள்வாய் இறைவா! என ஆசிரியர் துதிக்கும் வகையில் இந்நூல் அமைந்துள்ளது. பாடல்தோறும் மங்கை என்ற சொல் இடம் பெற்றுள்ளது.

இந்நூல் எளிய இனிய நடையினை உடையது. இறைவனிடம் பக்தியை வளரச்செய்யும் தன்மையுடையது. நெஞ்சை உருக்கும், பக்தி பரவசமூட்டும் பல பாடல்களை இதனுள் காணலாம்.

**கண்ணாடி தனில்யானை காண்பார் போலென்**

**கருத்திலுனைக் காண்பதெந்தக் காலம்...**

என இந்நூலாசிரியர் பாடியுள்ளமை எவர் மனதையும் இளக்கும் தன்மை வாய்ந்தது.

இந்நூலின்மூலம் சிவன் - பார்வதியின் தன்மைகளும், சிவபெருமான் செய்த பல்வேறு அருட்செயல்களும், பல புராணக் கதைகளும், திருநீறு, ஐந்தெழுத்தின் மகிமையும், திருமுறைகளின் சிறப்பும் அறியப்படுகிறது.

# மங்கையந்தாதி

## சிவமயம்

### விநாயகர் வணக்கம்

துதிக்குந் திருமங்கை வாழ்கரும் பேசர் துணைமலர்த்தாள்
பதிக்கும் பதிற்றுப்பத் தந்தாதி சொல்லமுன் பாரதம்பொன்
மதிக்கும் வரையில் வரைந்தது போலருள் மான்சசிபால்
உதிக்கு மிருகொம்புக் காளைமுன் வந்த வொருகொம்பனே

### இறை வணக்கம்

தாயே யெனப்பெண் ணுருவாய் வயாமக டன்முனுக்....
தாயே யுனைநம்பு மன்பர நேகர்க்கு மன்புகந்தாய்
பேயேன் றனக்கருள் வாய்மங்கை வாழ்கரும் பேசுரனே
நீயே கதியன்றி வேறே கதியில்லை நிச்சயமே

# சிவமயம்

## திருவளர் கரும்பேசர் துணை

## நூல்

கங்கை வளர்செஞ் சடைமுடியுங்
கருணை முகமுங் கண்மூன்றுஞ்
செங்கை மழுவு மானப்பயந்
திகழும் வரத முடன்திருமால்
தங்கை யொருபா லிருந்திலகத்
தாம்வந் தடியார் தமக்கருள்வார்
மங்கை வளருங் கரும்பேசர்
மலர்த்தா ளகத்தில் மறவேனே 1

மறவேன் றிருநீ றைந்தெழுத்து
மணியும் பணியு மருவுமன்பர்
உறவே யலது வேறுமெனக்
குளதோ வுளமே யுணராதோ
துறவே விரும்பிப் பலவேடத்
துடன்கா னகங்க டொறுநடந்தே
அறவே திரிய முடியாதுன்
னருள்பார் மங்கைக் கதிபதியே 2

பதியே பசுவே பசுபதியே
பாசத் தொடரின் பற்றறுக்குங்
கதியே மதியார் முப்புரந்தீக்
கண்ணா லெரிக்குங் கமழ்திருச்சந்
நிதியே யிரண்டுபைய நிதிபதிக்கு
நேயா வேணி நிறைந்தசுர
நதியே நதியால் விளங்குவயல்
நலஞ்சேர் மங்கை நாயகமே 3

அகமே வியமா மணிவிளக்கே
வயன்மால் தேவர்க் கரியவனே
இகமே லடியார்க் கெளியவனே
இமவான் மகளுக் கெழிலவனே
மகமே ருவைவில் லாய்வளைத்து
மதமா வுரித்த வலியவனே
சுகமே மங்கைப் பதிவாழ்பைந்
தோகைக் கரும்பே சுராதிபனே 4

ஆதி மறையா கமப்பொருளா
யணுவுக் கணுவா யகண்டிதமாய்
சோதி வடிவாய் நிற்குணமாய்த்
துரியா துரியச் சூட்சுமமாய்
நீதி நிறைவாய் நின்மலமாய்
நீராதா ரமுமாய் நிட்களமாய்
பூதி யணிமங் கைக்குருவாய்ப்
புவிமே லுதித்தாய் போற்றிடவே 5

போற்றுந் தமியேன் குரம்பைதனிற்
புகுந்து மயக்கைம் புலக்குறும்பை
மாற்றும் படிநீ நினைந்துயிரை
மறலிக் கிரையாய் வருத்தாமற்
தோற்று முனது திருச்சூலந்
தோண்மேற் பொறித்தாள் தொண்டர்துயர்
ஆற்றுங் கருணைக் கரும்பேயின்
னமுதே மங்கை யருட்கடலே 6

கடலிற் றிரையே நிகர்சொன்னக்
கருவி லுதித்துக் கருமவசத்
துடலிற் பிணியா லுனதடிமே
லொருபோ தணியே னொருபோதும்
அடலிற் சமனை யுதைத்தசர
ணாமென் றறியே னாட்கொள்வாய்
மடலிற் பசுந்தே னுகளிதழி
மலர்சேர் மங்கை வாழ்கரும்பே 7

கரும்புங் கனியு மடுபால்சர்க்
கரையுஞ் செழுந்தேன் கற்கண்டும்
விரும்புஞ் சுவைகள் போன்பொழியு
மின்னா ராமாம் விழிக்கென்மனம்
இரும்பு மெனவே யுழல்வேனுன்
னிருதாள் பணியே னிரங்காயோ
சுரும்பும் பணிபூங் குழலுமையாள்
துணைவா மங்கை சுடர்க்கொழுந்தே 8

கொழுந்தேன் முரலு மலர்சாத்திக்
 கும்பிட் டிருதாள் குறித்துவிழுந்
தெழுந்தே யன்பாய்த் திருமுறைக
 ளேழுந் துதித்தஞ் செழுத்துநெஞ்சில்
அழுந்தேன் தறுகண் ணறிவிலியை
 யாட்கொண் டருள்வ தறியேனான்
தொழுந்தே சிகனே மங்கைவளர்
 சுருதிக் கிறைவா சுந்தரனே 9

தரமா றுடைய மகவிருவர்
 தாமு மிருக்கத் தமிழ்மதுரை
யுரமா றுடைய மண்சுமந்தே
 யுதிர்பிட் டிரந்தா யுயர்வழுதி
கரமா றுடைத்தாய் மேனியின்மங்
 களமா தொருபாற் கலந்தனையே
சிரமா றுடைய சிவனேயுன்
 செயல்யா ரறிவார் செகந்தனிலே 10

தணிமு தற்பொரு ளென்றுனை யாகம
சாத்திர மறையோதுங்
கணிமொ ழிச்சிவ சக்தியல் லாலெவர்
கண்டவ ருண்டோகாண்
பணிம திச்சடை யாய்விடை யாய்பணி
பத்தர் வற்சலனேயென்
துனிவ யிற்றுநோய் தீர்த்தடி யாரெனத்
தொண்டுகொண் டருள்வாயே 11

தொண்ட கத்துறை யாதிப ரால்வருஞ்
சுகதுக்க மதனாலே
விண்ட கப்படு முயிர்க்கெலா நீயன்றி
வேறுளதோ வுரையாய்
முண்ட கத்திரு மாலயன் போற்றிடு
முக்கண் ணேகாள
கண்ட கத்தனே மங்கை வாழுமங்
களமின் மனோகரனே 12

கரக பாலமுஞ் சூலபி னாகமுங்
கண்ணுதல் மழுமானும்
உரக பூடண மடரு கடக்கையு
முத்தமி பாகமுமாய்ச்
சிரக ராதி யுடன்மன மெண்ணியே
சிந்தனை செய்தொருபோ
தரக ராவென மங்கையம் பதியா
ரங்குவந் தருள்வாரே 13

அருளு மைந்தரு மனைவியு மொக்கலு
மாடையு மாபரணப்
பொருளு மங்கமு மற்றவை யாவையும்
போதவு மேகுறித்து
மருளும் நெஞ்சனை வஞ்சனை யாட்கொள
வருவதெந் நாள்பரனே
தெருளு மன்பர்க் கினிகரும் பேசனே
செஞ்சடை யுடையானே 14

உடையும் யானை யதள்பணி பூடண
முண்பதும் விடமாகும்
சடையு மங்கமு மாதிரு வோருமே
சாபமு மாமிடமும்
விடையும் வாகன மையமுற் றோர்மங்கை
வித்தகா யாமெனவே
இடையு மம்பலந் தோறுநின் றாடினார்
ஏற்றுயர் கொடியாரே 15

கொடிய பாதகர் காதகர் மேற்றமிழ்
கூறியு மேபுகழ்ந்து
மிடிய தாலுமிக் குற்றியுங் கைத்தல
மெத்த வருந்தினனின்
அடிய லாற்கதி வேறிலை நம்பினே
அம்பிகை பங்காளா
நெடிய மால்விடை யாய்கரும் பேசனே
நீயருள் செய்வாயே 16

செய்வாய் சங்கு சங்கொடு தருநித்
திலநில வதனாலே
மைவாய் திங்க ளெனவிர வலர்கள்
வாய்விண் டலர்மங்கை
அய்வாய் தங்கு மதளுடைய யிடையா
யரிபிர மர்க்கரியாய்
மெய்வாய் கண்கள் செவிநா சியிலும்
மேவிய புலவோனே 17

புலம்பெறு சிந்தைமெய்ஞ் ஞானியர் யோகியர்
புரியுமு னூல்மறையோர்
உலம்பெறு மன்ப ரிடத்தில் முளைத்து
ருசித்த கரும்பாம்நீ
நலம்பெறு சுந்தர வாண்முக மங்கள
நாயகி பங்காசஞ்
சலம்பெறு துன்ப மகற்று மருந்தே
சந்திர சேகரனே 18

சேகர மன்பிலா நோயுறு தேகந்
தரித்திர சம்சாரஞ்
சாகர மென்றதன் பால்வரை துன்மதி
தான்மதி வீணாணிற்
சூகர வன்பனை யாளுவ துன்கடன்
சூழொளி பாவகதி
வாகர சந்திர லோசன மங்கையில்
வாழும யேசுரனே 19

சுரந்தருள் கற்றா மனமென வுருகித்
துறைசையில் வளர்குருநாத
மரந்தனில் நற்றே சிகனாய் மாணிக்க
வாசகர்க் குபதேசம்
புரந்தரு ளுற்றே பிரமர கீடம்
போலவு மேசெய்தாய்
சிரந்தரி யத்தா பித்தனை யுமாள்வாய்
தென்மங் கைக்கரசே 20

வேறு

கைக்கர வுடன்வாய் பொய்சேர்
        கயவரை யடுத்து நான்காத்
துக்கர முகமும் பார்த்துத்
        துன்பமே யின்ப மானேன்
அக்கர விந்தன் றன்கண்
        ணருச்சனை யடிமேற் செய்யச்
சக்கர மளித்தாய் மங்கைச்
        சம்புவே நம்பு வேனே 21

நம்புநின் சரணி ரண்டு
        நளினநாண் மலர தாக
வம்புவண் டேன ருந்தும்
        வண்டெனச் சுழலா நின்றேன்
தும்புரு வீணா கானத்
        துணைச்செவி யுடையாய் கங்கை
யம்புலிச் சடையாய் மங்கை
        யட்டமா சித்தி யானே 22

சித்தி[1]யார் மந்தி ரங்கள்
    செபித்துரு வேற்றிப் போற்றிப்
பத்தி[2]சே ரன்பர் போல்நின்
    பணிவிடை செய்தன் பாகி
முத்தி[3]சேர் வகைசற் றில்லா
    மூடனைக் காப்ப தெந்நாள்
அத்தியா பரணா மங்கை
    யம்பிகா பதியெம் மானே 23

**வேறு**

மானே நிகரும் விழிமடவார்
    மயலிற் சூறை வளிச்சருகாய்த்
தானே மனமு மயங்கிநித்தந்
    தயங்கித் திரிந்துன் றனைநினையேன்
ஊனே வுடலே வுடலிலுறு
    முயிரே வுயிருக் குறுதுணையே
கானே றுடையாய் விடவரவக்
    கைகங் கணனே முக்கணனே 24

---

பாடபேதம்: 1. சேர், 2. பத்தியா, 3. முத்தியா

கணப்போ துனது திருவடியைக்
கருத்தி விருத்திக் கனிந்துருகி
மணப்போ தணிந்து பணிந்துலகில்
மரித்துற் பவித்து மறுகாத
குணப்போ தவுளப் பழவடியார்
கூட்டத் தெனையுங் கூட்டாயோ
உணப்போ தனமாய் விடமருந்து
மொளியே மங்கை யுத்தமனே 25

### வேறு

உத்தம ரடியா ரென்ன
வுனக்குநா னடிமை யுற்றே
மத்தமர் தயிர்போல் நோவால்
மயங்கியே வருந்து வேனே
எத்தம ரிருந்து மென்னா
மிரங்கி நின்னருளே வேண்டும்
சித்தமர் வித்தே மங்கைச்
செங்கண்மா விடையா னானே 26

விடையமைந் ததனா லுள்ளம்
விதறியோர் நிலைமே வாமற்
புடையமைந் தோடும் யாற்றுப்
புரிசுழித் துரும்ப தானேன்
சடையமர்ந் திலகு மூலத்
தனிக்கரும் பானே யைங்கை
உடையமைந் தனையும் பெற்ற
வுமையொரு பாகத் தானே 27

பாகன மொழியும் வேலம்
பாமன விழியுங் காட்டு
மோகன வடிவா மின்னார்
முலைமத மாவுக் குள்ளம்
ஆகனற் கரும்பாய் வாடி
யலந்தன னருள்வாய் மஞ்ஞை
வாகன வேளைப் பெற்ற
மங்கையம் பதியி னானே 28

நானமும் பணியும் பூவும்
நலம்பெற வலங்க ரித்து
மானமுந் தவிர்த் துமீன
வகைத்தொழில் புரிய மாந்தர்க்
கூனமு மில்லா வின்சொல்
லுரைத்துயிர் காப்ப தெந்நாள்
ஏனமு மனமு போற்று
மிட்சுமா பட்சத் தானே 29

பட்சியாய்ச் சரப ரூபம்
படைத்தரி முதலோர் சிந்தைக்
கட்சிசேர்ந் தண்ட மீன்ற
காமக்கோட் டனத்தை மேவி
வெட்சியார் குகனைப் பெற்று
[1] மேதினி தனையு மன்பர்
குட்சிசேர் வினையுந் தீர்க்கும்
[2] கோமள மங்கை யானே 30

---

பாடபேதம்: 1. மேவலர் புரமு
2. கோகிளாக் கரும்பினாங்குள் விழிக்க மைந்தனே

## வேறு (கொச்சகம்)

கழையேந்து மாதவன் செங்கண்ணு மயன்சிரசும்
தழையேந்து கால்கரமேற் றனமைத்த வாறுலகில்
உழையேந் துனதடிமை யுண்டென் றுரைத்திடவோ
இழையேந்து கொங்கைக் கிசைந்தகரும் பேசுரனே 31

சுரமார் வனமலைக டோறுந் சுழல்பரம
பரமாருஞ் சாட்டையும் போற்பற்றவினை யுற்றலைந்தே
வுரமா ரெழுத்தஞ் சுரையே னருள்புரிவாய்
வரமார் கரும்பே மதிசெஞ் சடையானே 32

சடைவா யொருத்தியுந்[1] தான்பாதி யாயொருத்தி
இடைவா யொருத்தி யிருக்கமுனி[2] மாதர்
கடைவா யிரந்தாற் கலைநெகிழச் செய்வதுண்டோ
விடைவா யுகந்த[3] மகமேருச் சிலையானே 33

---

பாடபேதம் : 1. உடல், 2. யிருக்க ஈருடம்பு, 3. மங்கை.

சிலையாய் முளைத்தீர் சிலையே குடியானீர்
மலையான் மகளை மணந்திருக்க வேணுமென்றே
அலையார் கடல்விடமுண் டண்டர் தமைக்காத்து
நிலையா யருள்கரும்பே நீள்கருணை யாரமுதே 34

ஆரா மணிக்கரும்பே யாடரவோ டம்புதமாந்
தாரமத னைத்தலைமீ தில்வைத்துக் கொண்டதல்லாற்
பேரம்ப லந்தோறும் பித்தரென வேநடித்தீர்
வீரம ணியுமங்கை வேட்கன லோசனரே 35

வேடனெச்சில் தின்றும் விடாய்தீரா வாயுவுட்கொண்
டாடரவாய்த் தோலுரிசேர் தங்கமத்தி யாநீரே
கீடமுதல் மாதவஞ்சேர் கேரள சிங்கவள,
நாடதிப ரானவிட்சு நாதா சதாசிவமே 36

சிவமாகிச் சக்தியொடு சேர்ந்துருவ மாகித்
தவமாய் முளைத்ததனிக் கரும்பையே விரும்பாய்
அவமா யப்பிசித மருந்து மனமேயுற்
பவமா ரணமாம் பவக்கடலை நீந்துவையே 37

நீந்த வருகடலாம் நீயுன் கருணைகப்பல்
கூர்ந்தருள் பாய்மரமாங் கொடியென் கொடியாகும்
போந்திகல் வேறு புகலிடமுண் டோமலைமான்
காந்தனென்று மங்கைவளர் கன்னற் பெருமானே 38

பெருமான் கரத்தேந்தும் பெம்மானை வேதன்
றிருமான் மகிழுமங்கைச் செங்கரும்பைப் போற்றுவர்தாம்
இருமா நிலத்துக் கிறையாகி யப்பாற்
பொருமான் விழிச்சசியைப் பொன்னுலகை யாளுவரே 39

பாடபேதம் : 1. பொந்திருள

ஆளுங் கரும்பி னடிச்சார மாலறிவான்
வேளு மறிந்துலகை வென்றிபுரிந் தான்மனமே
கோளு மகலுமந்தக் கோலத் திருவடிநீ
நாளும் நினைவாய் நமனும் நினையானே 40

## வேறு

நினையும்வினை நினையாத வினைக டன்னால்
நீணரக சுவர்க்கமெய்தி நிலவி ராப்போற்
புனையும்வினை மாந்தர்களே முள்ளை முள்ளாற்
புரிந்துகளை வதுபோலப் புவன மீன்ற
அனையுமலர்ப் புங்கவனும் போற்று மங்கை
அமர்ந்தகரும் பேசர்சர ணார விந்தற்
தனையமுகந் தவர்பணியே செய்தாற் கன்மந்
தருவினைபோம் பரமபதந் தானுண் டாமே 41

தானுண்டென் றிருப்பவர்க டமைப்பு ரக்குந்
தழல்விலோ சனக்கரும்பே தாம ரைப்பொன்
மீனுண்ட வுலகதனி லாசை மூன்றால்
மெத்தமன மேமயங்கி மிகவ ருந்தி
ஆனுண்ட வுணவினரை நம்பிக் கான
வருந்தவிடாய்[1] தீருமென வலைவார் போல
நானுண்டென் றுனைப்பணிய வறியா தேவீ
ணாளாய்வீ ணாளாய்வா ணாளுற் றேனே 42

உற்றவரை வேற்றுமையா யெண்ணித் தோளி
லுகந்திருந்து செவிகடிக்கு முலுத்தர் தம்மை
யிற்றவரை யடுத்தொருசாண் வயிற்றுக் கீய
வெச்சில்தின்னும் விடாய்தீரா திருந்தே னுக்கே
கற்றவரை வளைத்துநகைத் திஞ்சி மூன்றுங்
கண்ணம்பா லெய்தகறைக் கண்டர் தொண்டர்
நற்றவரை யாதரிக்கு மங்கை வாழ்கன்
னற்பரனே தற்பரனே நலஞ்செய் வாயே 43

---

பாடபேதம் : 1. தணிநீரென்

நலம்புரியும் வெண்டிருசெந் திரு[1]வு லாவும்
நளினதடஞ் சூழ்மங்கை நாடு கந்து
கலம்புரியு மங்களநா யகிபங் காளா
கரும்பேசர் திருக்கோயில் கண்டு வண்டீர்
வலம்புரியுந் தெண்டனிடும் வாய்பு தைத்தும்
மதலைதர வேணுமென்று மறுத்து ரைத்தான்
சலம்புரியு மதன்போர்க்கு வின்னா ணாகத்
தான்பகைநீர் நானுமென்றே சாற்று வீரே 44

சாற்றுபுரா ணாகமவே தாந்த(ம்) மேலாஞ்
சச்சிதா னந்த[2]மெனச் சராச ரங்கள்
போற்றுதனி மூலமெனும் வேழமூர்த்தி
பொற்கழலை நினைந்திறைஞ்சிப் போற்றா தார்தாம்
வேற்றுரு வநேகமெடுத் துலைந்து நோவால்
மெலிந்திறுதி[3]க் காலமுற்று மேதி வாழ்வெங்
கூற்றுவச மாய்ச்சூல முங்கட்டச் சூலங்
குற்றவெழு நரகினிலுங் குடியா வாரே 45

---

பாடபேதம் : 1. திருவும் வாழும். 2. மதாய்.,3. யாய்ச் செங்கண்

குடியாய மங்கையினு மன்பர்மனத் தினும்வாழ்
குளிர்கலா நிதிநதிசேர் கோடீ ரத்தா
துடியாருந் செங்கராசங் கரகி ரீசா
தோகைவளர் கரும்பேசர் துணைத்தாள் போற்ற
மிடியார்நல் குரவலகை விலங்கு தீக்கொள்
விடபாவம்[1] மகலும் வினைக டீரும்
அடியார்போற் றாழ்வில்லா வாழ்வுண் டாகி[2]
யருளுண்டா மெய்ஞ்ஞான வறிவுண் டாமே 46

அறியாமை யிருக்குமன வஞ்ச புஞ்ச
மருந்துயரம் பலபிணிக்கா தார வில்லம்
குறியான மலபாண்ட மயான காட்டங்
கொடுங்காம வறைதவறு குடில பீடம்
வெறியான பித்துருவங் கர்ம காண்ட
மேவியுனக் காளாகி விடிவ தெந்நாள்
மறியார்செங் காதலனே [3]வடியார் வாழ்வே
மங்கைவளர் கரும்பேவிண் மணிக்கண் ணனே
47

பாடபேதம் : 1. பிணி, 2. நல்ல, 3. வறிஞோர்

கண்ணாடி தனில்யானை காண்பார் போலென்
கருத்திலுனைக் காண்பதெந்தக் காலங் காலன்
உண்ணாடிப் பாசமுங் கைக்கொண் டதட்டி
யுறுக்கியழைத் திடப்பயந்தே யுடல்விட் டாவி
விண்ணாடிப் புலன்[1]பொறிகள் விழிகு ழன்று
விக்கலைமே வாய்வருந்தும் வேளை கண்டே
மண்ணாடி வந்தருள்வாய் மங்கை வாழ்வே
மங்களநா யகிபாகா மழுக்கை யானே 48

மழுப்புரமுங் கருணையில்லாக் கண்ணு மீயா
மரக்கரமு மின்சொலில்லா வாயும் பெற்றுக்
கொழுப்புடன்பூ பாரமென வீணா ணுண்டு
கொடுவினைக்கா யுடலெடுத்துக் கொண்ட லைந்தேன்
முழுப்புவன சிருட்டிதிதி சங்கா ரம்மா
முத்தொழிலு மெத்தொழிலு முடிப்போ மென்று
விழுப்புயர்வெள் ளேறுயாத்த கொடிக்க ரும்பே
வேண்டுமுன தருளிதுகாண் வேளை தானே 49

பாடபேதம் : 1. மயங்கி

வேளையெரித் தாய்கமலன் றலையைக் கொய்தாய்
விழிபறித்தாய் மாலைதக்கன் வேள்வி விட்டாய்
தாளையசைத் தேயுதைத்தாய் சமனை வெற்பார்
தசமுகனைப் பெருவிரலாற் றணியச் செய்தாய்
நாளையென வெண்ணாமற் றாழ்வு வாழ்வும்
நல்கினைவன் பன்பவர்போல் நாடிநாளுமா கநிதமன்
வாளைதிகழ் தடம்புடைசூழ் மங்கை நாட்டில்
வளர்கரும்பே யென்பிணியு மாற்று வாயே 50

### வேறு

வாயுந் திகழ்மன மாகந் திரிவித
மாகுங் கரணமு மேகமுமாய்
வேயுந் தருமணி போன்மங் கையில்வளர்
வேழங் குடியென வாழீசர்
சேயுந் தமிழ்மறை யோனுந் திருமக
டேவு முனிவர்க டேவருமன்
பாயுந் தொழுதருண் மேவுந் திருவடி
பணிவா ரவர்வினை தணிவாரே 51

தனியுங் கருமுகி லகிலசை வலமருள்
தாரே வுன்றற வார்குழல்கார்
மணியுந் திருமகள் கலைமக ணிறமென
வங்கயல் விழிசேர் மங்களமான்
அணியுங் கழையுரு வெனவும் வளர்பர
னம்புய வடியினை நம்பியுமே
பணியுந் தவிர்வது சென்னம் பலபிணி
பாசமு மிகலயம் பாசமுமே 52

பாசன மிசைபரி பாகுட னறுசுவை
பாலமு ததியா பாலுறவே
போசனம் நுகரவு மேதில னுமதிரு
போதடி பரவவு மேதவறாம்
மாசன வேதக டார்சுழல் பிணிகெட
மாதய வருள்செயு மாதாவாய்
மோசன வாநதி வாழ்சடை யணிகழை
மூலமர் செகபரி பாலனரே 53

பால னயன்மது வேள்புர திரிபுரம்
பாறிட வமர்தரும் வீறுடனே
காலன முயலகன் மேலடர் புரிவது
கால்கர மதுவெலு மாலிபமே
மாலன வருளது தானடி யவர்துயர்
மாளவு மிகல்செயும் வாண்மனமே
வேலன விழிநடை யாளுமை புணர்கழை
வேதரை நிதநினை தீதிலையே 54

தீங்கரும் பிணிக்குடல் நொந்துழல் வதுவின்றிச்
சேர்ந்தடி யவரெனத் திரியாது
பாங்கரு மொழிந்த மோஞ்சிவ வெனவுமன்
பாந்திரு முறைகளைப் பகராது
கோங்காரும் பிணைமுலைச் சாம்பவி யுடனுனைக்
கூர்ந்தக நினையவுங் குறியாது
பூங்கரும் பதில்வளர் சாம்ப சதாசிவ
பூங்கழ லிணையருள் புரியாயே 55

புரியு மிருவினை தனிலும் வருபிணி
　　போக்குறா துலைதுன் மார்க்கரே
எரியு மாமதி விழியு மணிகரும்
　　பேசர் மங்கையினில் வாசமாம்
வரியு மணியான் விழியின மணியது
　　மந்திர மாவதெ ழுத்தைந்துமே
தரியு நினையுநல் லவிழ்த மனுதினஞ்
　　சாற்றுவீர் திருவெண் ணீற்றையே 56

நீற்றறை யுறைதிரு நா(வு)க்கர சிடரினை
　　நீக்குவ தெனவடி யேற்கடரா
காற்றறை வலியறு லூற்றொடு பொருமியுங்
　　காத்திர மிழைத்திரை காற்றறாநோய்
மாற்றருள் புரியினி யாற்றில் னுனதடி
　　மாத்திரங் கதியல தாற்றுவரார்
வேற்றலர் புரமெரி நேத்திரம் வளர்நுதல்
　　வேட்கரும் பிரைவபஞ் சாக்கரனே 57

கரமஞ் சுடைகய முகனந் தரிபரை
    ககமங் கையில்வட திகைவாழுஞ்
சிரமஞ் சுபையவர் [1]பரைமங் களமயில்
    தினமும் புணர்கழை வனவாசர்
சரமஞ் சுகடிகழ் மதில்மண் படமுயர்
    தடமுன் றினில்பணி விடை செய்வோர்
புரமஞ் சுறயம னமரும் பழவினை
    பொருதும் பிணிகளுங் கருதாரே 58

கருதார் திரிபுர மெரிதா விடவடர்
    கண்ணுத லேமறை விண்ணவர்மால்
வருதா பதர்பணி கழையே சுரமலை
    மஞ்ஞையோர் பால்வளர் பிஞ்ஞகனே
ஒருதாழ் வடமொடு திருநீ றிடவுனை
    யுன்னிட வேந்த மன்னவர்பால்
இருதாண் மலரருள் புரிவா யெனையவ
    ரென்னையு மேசெய்வை யின்னமுதே 59

பாடபேதம் : 1. வர

இன்மையு மறுமையு மம்மையு மெழுமையு
மின்புட னுணைநினைந் தன்புசெய்யேன்
நன்மையுந் திகழறி வின்மையும் பிணியொடு
நயந்துடல் வருந்தினேன் வந்தருள்வாய்
பன்மையு மொருமையு முண்மையு மறைபுகல்
பங்கய கரபண கங்கணனே
வன்மையும் பலதளை மென்மையி லணிவள
மங்கையில் வளர்கழைச் சங்கரனே 60

### வேறு

சங்கினம் பனைசூழ் மங்கைநா[1] டாளுஞ்
சாம்பவி மங்களே சுவரிதன்
பங்கினர் கரும்பே சுரரிரு நளின
பாதமே கதியெனப் பணியக்
கொங்கினங் கமழும் புட்பசா திகளாய்க்
கூவிளை யறுகிவேர் கொழுந்தாய்
அங்கினம் கோவில் திருப்படி யாகவு
மமைத்தெனப் படைத்தில னயனே 61

---

பாடபேதம் : 1. டாழுஞ்

அயமுகன் றக்கன் வேள்வியி லுகந்தே
யதிலவிப் பாகமும் வேண்டுங்
கயமுகன் முதலாந் தேவருக் கெல்லாங்
கனல்விழி யுதித்தவன் கையாற்
பயமுக மளித்தா யப்படி யடியேன்
பாரவல் வினையினைப் பாராய்
நயமுக மாகும் பத்தவற் சலனே
நாதனே மங்கைநாட் டரசே 62

அரசுதா கரன்சேர் பவளகோ டீரா
வமலனே திரிபுராந் தகனே
பரசுபா ணியனே திருவளர் கரும்பே
பரமனே யெனப்பெயர் பகர்ந்து
சிரசுமேற் கரமா யகத்திலஞ் செழுத்துந்
திருவெண்ணீ றக்குடன் றிகழ
முரசுயர் கோவில் வலம்புரிந் திடுவார்
முத்தரா யிருப்பவர்முத் தினத்தே 63

முத்திருந் திலகு முளரியந் தடஞ்சூழ்
முத்தமிழ் மங்கைமூ தூர்வாழ்
நத்திசை கிரீப மங்கள நாயகி
நயனமாஞ் சகோரமு நாடப்
பத்திரு நான்கு கலைவள நமிர்தப்
பசுங்கதிர்க் கன்னலம் பரனென்
றெத்திசை துதிக்க வுதித்தனை விண்ணோர்க்
கிறைவனே மறையவர்க் கிருக்கே 64

இருக்கு மாசன மீதிலன் பாகவே
யிருந்தியேநல் லமுதுக ளென்றுமன்
பருக்கு மீய்ந்துன் பணிவிடை செய்தபின்
பாலிப்பாய்நின் பரம பதத்தையே
முருக்கும் நெரித்திட செங்கனி வாய்க்குறு
முரலா[1]ம துள்ள முகந்து[2]தான்
செருக்கு மங்கள நாயகி பங்கில்வாழ்
செம்மலே யெம்மையாள் சிவனே 65

பாடபேதம் : 1. லுன்தருட், 2. செல்ல

சிவந்த தாளை நினைந்தருட் செல்வந்தான்
        சேரவேயறி வின்றியுந் திகைத்தே
உவந்த தீப மிருக்கவுந் தீயுகந்
        தோடிநான் தேடியு முலைந்தேன்
அவந்த யர்விலி கூற்றஞ்சு மேயெழுத்
        தஞ்சுமேயென் னுளத்தி லழுத்துவாய்
கவந்த வார்சடை வளர்கரும் பேசனே
        காமனைக் காயந்தருள் கண்ணே 66

கண்ண னாலிரு கண்ணனா மாயிரங்
        கடவுளர் பதிகளுங் கருதேன்
றிண்ண நின்றிருக் கோவினில் மேவிய
        திருப்பணிச் சிலையெனச் செனிப்பேன்
எண்ணமீ தன்றி வேறிலை தானெனக்
        கீழைபங் காளனே யிரங்காய்
தண்ண மேந்திய பாணியாய் பாணிவாழ்
        சடிலனே கற்பகத் தருவே 67

தரும நீதியு மோட்சசா தகங்கல்
சாத்திரங் கலைகளுந் தரித்தே
உரும மந்திசந் தியிலுநின் றிருப்பெயர்
ஓர்திட முரைத்திட வுணரேன்
கரும தேக மெடுத்தலைந் தாற்றிலே
கரைத்திடும்புளி யாகினேன் காத்திடாய்
மரும மாதவன் வேதவன் போற்றிடு
மங்கைவாழ்செங் கரும்பிறை வள்ளலே 68

வள்ளத்தா மரைமலர் வாவிசூழ் மங்கை
வளர்கரும் பேசர்சே வடியை
உள்ளத்தா மரைமிசை வைத்தெழுத் தஞ்சுறு
றுருச்செபித் துகந்திடு வோர்கள்
வெள்ளத்தா மரைமயில் திருமயில் நாளு
மேவிவாழ்ந் தன்புமேன் மேலும்
கொள்ளத்தா மரைமதி யணிந்தவ ரடியார்
கொள்கையோ விருப்பர்தாள் குடியே 69

குடிக்கும் நீரெனக் கானலைத் தாகமாய்க்
குறுகியே மறுகின குணம்போல்
மடிக்குந் தெய்வங் களைநாடிக் கும்பிட்டே
வாழ்த்திநா னிழைத்துனை வணங்கேன்
தடிக்கும் புல்லறி வாளனைக் காத்திடாய்
தஞ்சம்நீ கதியாகுஞ் சபையிலே
நடிக்கு மங்கை வளர்கரும் பேசனே
நம்பனே சொன்னபன் னகனே 70

**வேறு**

நகத்தி னாற்பொன் னசுரனை மார்புகீண்
டிகத்தின் மேலரி யெய்தும் வெறிகெட
வகத்திற் புள்ளுரு வாங்கரும் பேசனே
சகத்தி லென்றுயர் தன்னையு மாற்றுவாய் 71

மாற்றலர் முப்புர மாள நகைத்துவன்
கூற்று[1] தன்னையுங் கோபித் துதைத்தனை
போற்று மன்பர் புகலன்பி னாலன்றோ
ஆற்றுயர் கொடியாய் மங்கை யீசனே 72

பாடபேதம் : 1. மஞ்சிடக்

ஈசர் மங்கை யிறைவர்பொற் றாளன்பிற்
பேச யாரும் பிழைதவிர்ந் துய்குவார்
நீசர் நாளைப்போ வார்நிறை யன்பினாற்
பாசம் போயம் பரமன்று ளெய்தினர் 73

எய்தி கத்தினி லின்பதுன் பத்துயர்
பொய்தி கழ்ப்புன் புலையுடம் பாற்றி(நீ)யே
வைதி கச்சைவ வாழ்வுகந் தீசனே
செய்தி கழ்ச்சியில் லாதருள் செய்வையே 74

வைய மாநில மாய்ப்புரம் வென்றவர்
வைய மீது வளர்கரும் பேசுரர்
செய்ய தாமரைச் சேவடி சிந்தனை
செய்ய வேதன் சிருட்டிப்ப தில்லையே 75

தில்லை மாவனஞ் சேருஞ் சிதம்பரத்
தெல்லை காண வெமபுராப் காண்கிலர்
தொல்லை முத்தி யுதவினை பொற்கிரி
வில்லை யேந்துகை வேழும யேசனே 76

ஏச யாரு மெடுத்துடல் நோயினால்
மாச டைந்துனை வந்து வணங்கிலேன்
பாச மோடெம்மை படைத்தவ ராள்வதுக்
கேச டைவுமுண் டோசொல் கிரீசனே 77

கிரிகை யாலுமுன் கேசவன் பூசைதாள்
அரிய கண்ணிடந் தாழிபெற் றான்மங்கை
யுரிய வீசர் பணியுகந் தோர்கட்குத்
தெரிய ஞான கிரிகையுஞ் சித்தியே 78

சித்த ராதிமூ வாறு திருக்கணம்
பத்த ராகிப் பணிவிடை செய்தால்
நித்த ராயநன் னிலைமையுற் றார்மங்கை
அத்தர் தாணினை வார்க்குமுண் டாகுமே 79

ஆகு வாகன ராறு முகவர்க்கு
மாகு மையர் மதனயன் மாதுலர்
நாகு மங்கள நாயகி மால்பங்கா
ஆகு லத்தெனக் காண்டவ ராமின்னே 80

மின்னாரிடை மடவார்மயல் மேவும்.........................
பொன்னாரவர் சுவர்க்கஞ்சுக போகந்தரு மென்றே
என்னாருயிர் சுடர்தீபவன் டெனவாயின் கரும்பே
துன்னார்புர மெரித்தோயருள் துணைத்தாமரை யடியே 81

அடியாருட னுறவாய்த்திரு வடித்தொண்டுகள் புரியேன்
நடியார்சபை முதல்மாதலம் நாமேன்தட மாடேன்
மிடியார்பிணி பசிவாட்டவும் வினையேனுனை நினையேன்
துடியார்கா தலனேகழைச் சுடரேயரு டருவாய் 82

தருவார்பொழில் சொரிதேனிறை தடத்தாமரை யிடத்தார்
மருவார்திரு மங்கைப்பதி வாசர்கரும் பேசர்
திருவார்மதில் சிகரந்திகழ் திருவாலய மருவார்
கருவார்பிறப் பிறப்பாய்நர கத்தேயுறை வித்தே 83

வித்தாரம துரஞ்சித்திர மேலாசொடு நாலாம்
பத்தாரழ கார்வாழ்கவி பாடிப்புகழ்ந் தோர்கள்
இத்தாரணி முழுதுந்திரிந் திளைத்தேனென்னை யழைத்தே
முத்தார்செழுங் கரும்பேசுர முதல்வாவரு ளுதவாய் 84

உதவார்ரவர் பொருளாறன லுள.... களவுக்
கிதவாமுன தடியேன்கலிக் கிவர்தாமிரங் குவரோ
சதவாண்மகன் முதலோர்மலை தருமங்கையும் வெருவ
மதவாரண முரித்தோய்திரு மங்கைப்பதி யானே 85

யானென்பது மகமென்பது மினதென்பது மனத்தும்
ஊனென்பது முடலென்பது முயிரென்பது முயிருக்
கானென்பது மருளென்பது மறிவென்பதும் நெறிநீ
தானென்பதும் வேறோவுரை திருமங்கை யானே 86

## பின்னிணைப்பு-1

# மங்கையந்தாதி

## செய்யுள் முதற்குறிப்பகராதி

| வ.எண் | பாடல் முதற்குறிப்பு | பாடல் எண் |
|---|---|---|
| 1. | அகமே வியமா | 04 |
| 2. | அடியாருட னுறவாய் | 82 |
| 3. | அயமுகன் றக்கன் | 62 |
| 4. | அரசுதா கரன் | 63 |
| 5. | அருளு மைந்தரு | 14 |
| 6. | அறியாமை யிருக்கி | 47 |
| 7. | ஆகு வாகன | 80 |
| 8. | ஆதி மறை | 05 |
| 9. | ஆரா மணிக்கரும்பே | 35 |
| 10. | ஆளுங் கரும்பி | 40 |
| 11. | இருக்கு மாசன | 65 |
| 12. | இன்மையு மறுமையு | 60 |

13. ஈசர் மங்கை 73

14. உடையும் யானை 15

15. உத்தம ரடியா 26

16. உதவாரவர் 85

17. உற்றவரை வேற்றுமையா 43

18. எய்தி கத்தினி 74

19. ஏச யாரு 77

20. கங்கை வளர் 01

21. கடலிற் றிரையே 07

22. கண்ணனா லிரு 67

23. கண்ணாடி தனில் 48

24. கணப்போ துனது 25

25. கரக பாலமுஞ் 13

26. கரமஞ் சுடை 58

27. கருதார் திரிபுர 59

28. கரும்புங் கனியு 08

29. கழையேந்து மாதவன் 31

30. குடிக்கும் நீரெனக் 70

31. குடியாய மங்கை 46
32. கிரிகை யாலுமுன் 78
33. கைக்கர வுடன் 21
34. கொடிய பாதகர் 16
35. கொழுந்தேன் முரலு 09
36. சங்கினம் பனைசூழ் 61
37. சடைவா யொருத்தி 33
38. சாற்றுபுரா ணாகம 45
39. சித்த ராதி 79
40. சித்தியார் மந்திரங்கள் 23
41. சிலையாய் முளைத்தீர் 34
42. சிவந்த தாளை 66
43. சிவமாகிச் சக்தியொடு 37
44. சுரந்தருள் 20
45. சுரமார் வனமலை 32
46. செய்வாய் சங்கு 17
47. சேகர மன்பிலா 19
48. தரும நீதி 68

| | |
|---|---|
| 49. தருவார் பொழில் | 83 |
| 50. தணிமு தற்பொரு | 11 |
| 51. தணியுங் கருமுகி | 52 |
| 52. தரமா றுடைய | 10 |
| 53. தானுண்டென் றிருப்பவர் | 42 |
| 54. தில்லை மாவனஞ் | 76 |
| 55. தீங்கரும் பிணிக்குடல் | 55 |
| 56. தொண்ட கத்துறை | 12 |
| 57. நகத்தி னாற் | 71 |
| 58. நம்புநின் | 22 |
| 59. நலம்புரியும் | 44 |
| 60. நாணமும் பணியும் | 29 |
| 61. நினையும்வினை | 41 |
| 62. நீந்த வருகடலாம் | 38 |
| 63. நீற்றறை யுறை | 57 |
| 64. பட்சியாய்ச் | 30 |
| 65. பதியே பசுவே | 03 |
| 66. பாகன மொழியும் | 28 |

67. பாசன மிசை 53

68. பால னயன் 54

69. புரியு மிருவினை 56

70. புலம்பெறு சிந்தை 18

71. பெருமான் கரத்தேந்தும் 39

72. போற்றுந் தமியேன் 06

73. மழுப்புரமுங் கருணை 49

74. மறவேன் றிரு 02

75. மாற்றலர் முப்புர 72

76. மானே நிகரும் 24

77. மின்னாரிடை மடவார் 81

78. முத்திருந் திலகு 64

79. யானென்பது 86

80. வள்ளத்தா மரை 69

81. வாயுந் திகழ் 51

82. விடையமைந் ததனா 27

83. வித்தாரம துர 84

84. வேடனெச்சில் 36

85. வேளையெரித் தாய் 50

86. வைய மாநில 75

## பின்னிணைப்பு-2

# மங்கையந்தாதி
# சொல்லடைவு

| | |
|---|---|
| அகம் | -(01,04) |
| அகில் | -(52) |
| அங்குனம் | -(61) |
| அட்டமாசித்தி | -(22) |
| அடல் | -(07) |
| அடிமை | -(26,31) |
| அடியவர் | -(54,55) |
| அடியார் | -(04,11,26,46,69,82) |
| அடியேன் | -(85) |
| அண்டம் | -(30) |
| அண்டர் | -(34) |
| அணி | -(25,52) |
| அணு | -(05) |
| அதிபதி | -(02) |
| அதிபன் | -(04) |
| அம்பலம் | -(15) |
| அம்பிகாபதி | -(23) |
| அம்பிகை | -(16) |
| அம்புலி | - (22) |
| அம்மை | -(60) |
| அமலன் | -(63) |

அமுது -(06)
அய்வாய் -(17)
அயமுகன் -(62)
அரக்கன் -(62)
அரசு -(63)
அரவம் -(35)
அரியவன் -(04)
அருட்கடல் -(06)
அருள் -(0.1,0.2,02,09,13,14,16,32,34,46,55,74)
அருள்வாய் -(11,26,26,28,48,60)
அலங்கரி -(29)
அலை -(34,49,66)
அவை -(34)
அழுந்தேன் -(09)
அறியாமை -(47)
அறியேன் -(09)
அறிவு -(46,66)
அறுசுவை -(53)
அன்பர் -(18,46)
அன்பு -(09,60)
அனுதினம் -(56)
ஆகமப்பொருள் -(05)
ஆகமம் -(11)
ஆகுவாகனர் -(80)
ஆசை -(42)
ஆட்கொள் -(07,14)
ஆடல் -(07)
ஆடை -(14)

| | |
|---|---|
| ஆதரி | -(43) |
| ஆதாரவில்லம் | -(47) |
| ஆதிமறை | -(05) |
| ஆபரணம் | -(14) |
| ஆராமணி | -(35) |
| ஆவி | -(48) |
| ஆளுமை | -(54) |
| ஆளுவது | -(19) |
| ஆற்றும் | -(06) |
| ஆறு | -(68) |
| ஆறுமுகவர் | -(80) |
| இகம் | -(04) |
| இசை | -(31) |
| இடை | -(15,35) |
| இமவான் | -(04) |
| இரண்டு | -(22) |
| இருதாள் | -(08) |
| இருதானை | -(59) |
| இரும்பு | -(08) |
| இருவினை | -(56) |
| இரை | -(06) |
| இழை | -(31) |
| இறைவன் | -(64,73) |
| இன்பம் | -(21,74) |
| இன்மை | -(60) |
| ஈசன் | -(74) |
| ஈய | -(43) |
| உகந்ததாய் | -(0.2) |

| | |
|---|---|
| உடல் | -(24,48,77,86) |
| உடை | -(15,27) |
| உத்தமர் | -(26) |
| உத்தமன் | -(25) |
| உதி | -(0.1,05) |
| உதிர்பிட்டி | -(10) |
| உபதேசம் | -(20) |
| உயர்வழுதி | -(10) |
| உயிர் | -(06,11,24,29,86) |
| உரம் | -(68) |
| உருகி | -(20,25) |
| உரை | -(11,12) |
| உலகம் | -(42,45) |
| உலம்பெறு | -(18) |
| உழல் | -(08,55) |
| உழை | -(31) |
| உள்ளம் | -(27,28,66) |
| உளம் | -(02) |
| உளன் | -(86) |
| உற்பவி | -(25) |
| உற்றவர் | -(43) |
| உறவு | -(02) |
| உறுதுணை | -(24) |
| உறை | -(57) |
| உன்கடன் | -(19) |
| உனது | -(25) |
| ஊன் | -(24) |
| எத்தமர் | -(26) |

| | |
|---|---|
| எரி | -(50) |
| எழிலவன் | -(04) |
| எழுத்தைந்து | -(56) |
| எளியவன் | -(04) |
| ஏற்றுயர் | -(15) |
| ஏனம் | -(29) |
| ஐந்தெழுத்து | -(02) |
| ஒருசாண் | -(43) |
| ஒருத்தி | -(33) |
| ஓது | -(11) |
| கங்கை | -(01,22) |
| கட்சி | -(30) |
| கடக்கை | -(13) |
| கடமை | -(42) |
| கடல் | -(07,34) |
| கடவுள் | -(67) |
| கடை | -(33) |
| கண் | -(01,03,17,61) |
| கண்டவர் | -(11) |
| கண்டிதம் | -(05) |
| கண்ணன் | -(67) |
| கண்ணாடி | -(48) |
| கண்ணுதல் | -(13,59) |
| கணப்போது | -(25) |
| கதி | -(0.2,03,16) |
| கமலன் | -(50) |
| கயமுகன் | -(58,62) |
| கயவர் | -(21) |

கரமஞ்சுடை -(58)
கரமாறு -(10)
கரு -(07)
கருணை -(01,49)
கருத்து -(48)
கரும்பு -(06,07,08,18,28,32,34,35,42,47,49)
கரும்பேசர் -(0.1,41,44,46,56,69,83)
கரும்பேசன் -(14.16.66,71)
கரும்பேசுரர் -(04,75)
கரும்பேசுரன் -(0.2,31)
கருமுகில் -(52)
கரை -(68)
கலாநிதி -(46)
கலைமகன் -(52)
கலைவளர் -(64)
கவி -(84)
கழை -(31,52,53,58)
கற்கண்டு -(08)
கற்றவர் -(43)
கறை -(41)
கனல்விழி -(62)
கனி -(08,25)
காண் -(11)
காதகர் -(16)
காதலன் -(82)
காமன் -(66)
கால் -(31)
காலன் -(48,54)

காளை -(0.1)
காற்றறை -(57)
கானேறு -(24)
கிடம் -(20)
கிரிகை -(78)
கிரீசன் -(77)
குகன் -(30)
குடி -(46,50,69,70)
குணம் -(70)
குரம்பை -(06)
குரு -(05)
குறும்பை -(06)
கூர்ந்தருள் -(38)
கூற்றம் -(66)
கூற்று -(72)
கூனம் -(29)
கெதி -(61,70)
கேசவன் -(78)
கேரள -(36)
கை -(16,24)
கொங்கை -(31)
கொடி -(72)
கொடிய -(16)
கொடியார் -(15)
கொடுவினை -(49)
கொம்பன் -(0.1)
கொம்பு -(0.1)
கொய் -(50)

கொல்லை -(76)
கொழுந்தேன் -(09)
கொழுப்பு -(49)
கொள்ளை -(69)
கோபி -(72)
கோவில் -(61,63)
கோள் -(40)
சக்கரம் -(21)
சக்தி -(37)
சகம் -(71)
சங்கரன் -(60)
சங்கு -(17)
சங்குனம் -(61)
சடை -(11,15,27,33,72)
சதாசிவ -(36,55)
சந்திரலோசன -(19)
சபை -(70)
சம்சாரஞ் -(19)
சம்பு -(21)
சர்க்கரை -(08)
சரபரூபம் -(30)
சராசரங்கள் -(45)
சலம் -(44)
சாகர -(19)
சாத்தி -(09)
சாத்திரம் -(11,68)
சாதி -(61)
சாபம் -(15)

| | |
|---|---|
| சாம்பவி | -(55,61) |
| சாற்று | -(56) |
| சித்தமர் | -(26) |
| சித்தர் | -(79) |
| சித்தி | -(78) |
| சித்தியார் | -(23) |
| சிதம்பரம் | -(76) |
| சிந்தனை | -(13,75) |
| சிந்தை | -(18,30) |
| சிரகராதி | -(130 |
| சிரசு | -(63) |
| சிரந்தரி | -(20) |
| சிரமாறு | -(10) |
| சிலை | -(34) |
| சிவசக்தி | -(11) |
| சிவம் | -(37) |
| சிவன் | -(10,65) |
| சுகபோகம் | -(81) |
| சுகம் | -(04,12) |
| சுடர்கொழுந்து | -(08) |
| சுந்தரன் | -(09) |
| சுரந்தருள் | -(20) |
| சுரமார் | -(32) |
| சுருதி | -(09) |
| சுரும்பு | -(08) |
| சுவர்க்கம் | -(41) |
| சுவை | -(08,53) |
| சுழல் | -(32) |

சூட்சுமம் -(05)
சூழொளி -(19)
சூறை -(24)
செகம் -(10)
செங்கண் -(31)
செங்கை -(01)
செஞ்சடை -(01,14,32)
செபி -(23,69)
செய்வாய் -(16,17)
செருக்கு -(65)
செல்வம் -(66)
செவி -(17)
செழுந்தேன் -(08)
சேவடி -(69,75)
சைவவாழ்வு -(74)
சோதி -(05)
தசமுகன் -(50)
தஞ்சம் -(70)
தடத்தாமரை -(83)
தடி -(70)
தணிவார் -(51)
தமியேன் -(06)
தமிழ்மதுரை -(10)
தயிர் -(26)
தருவிணை -(41)
தலை -(35,50)
தவம் -(37)
தழை -(31)

தறுகண் -(09)
தாகம் -(70)
தாமரை -(42,75,81)
தாய் -(0.2)
தாரணி -(84)
தாள் -(01,08)
தான்மதி -(19)
திங்கள் -(17)
திடம் -(68)
திரி -(24)
திரிபுரம் -(54,59)
திருக்கணம் -(79)
திருக்கோவில் -(44)
திருச்சூலம் -(06)
திருநீறு -(02)
திருப்படி -(61)
திருமகள் -(52)
திருமங்கை -(85)
திருமால் -(01)
திருமுறைகள் -(09,55)
திருவடி -(25,40,82)
திருவெண்ணீர் -(56)
திரை -(07)
தில்லை -(76)
தீ -(66)
துக்கம் -(12)
துடல் -(07)
துடியார் -(82)

துணை -(70)
துணைத்தாள் -(46)
துதி -(0.1,09)
தும்புரு -(22)
துயர் -(06,54,71,74)
துறவு -(02)
துறைசை -(20)
துன்பம் -(18,21,74)
துன்மதி -(19)
துன்மார்க்கர் -(56)
துளிவயிற்றுநோய் -(11)
தெண்டன் -(44)
தெய்வங்கள் -(70)
தெருள் -(14)
தேகம் -(19,68)
தேசிகன் -(09)
தேவர் -(04,62)
தேவி -(43)
தொண்டர் -(06,72)
தொண்டு -(11)
தொண்டுகர் -(82)
தொழில் -(29)
தோகை -(46)
தோள் -(43)
தோற்றும் -(06)
நகம் -(71)
நகை -(43,72)
நடி -(70)

நடியார் -(82)
நதி -(03)
நம்பு -(21,22)
நமன் -(40)
நயமுகம் -(62)
நலம் -(18,43,44)
நளினநாண் -(22)
நற்தேசிகன் -(20)
நன்மை -(60)
நாசி -(17)
நாடி -(70)
நாண் -(22)
நாயகம் -(03)
நாயகி -(80)
நானம் -(29)
நிகர் -(07)
நிச்சயம் -(0.2)
நிட்களம் -(05)
நித்தம் -(24)
நித்தர் -(79)
நிதி -(03)
நிலம் -(39)
நிற்குணம் -(05)
நிறையன்பு -(73)
நிறைவு -(05)
நின்மலம் -(05)
நினை -(60)
நீக்கு -(57)

நீதி -(05)
நீர் -(70)
நீராதாரம் - (05)
நீற்றரை -(57)
நெடிய -(16)
நேத்திரம் -(57)
நோய் -(11,19,77)
நோவால் -(26,45)
பக்தவற்சலன் -(62)
பகர் -(55)
பகை -(44)
பங்காளன் -(16,44,67)
பசி -(82)
பசு -(03)
பசுந்தேன் -(07)
பட்சி -(30)
பணி -(02,29,41)
பணிவிடை -(23,65,79)
பத்தர் -(79)
பத்தர்வற்சலன் -(11,62)
பதி -(0.1,04,85)
பதிற்றுப்பத்தந்தாதி -(0.1)
பயந்து -(48)
பயமுகம் -(62)
பரமபதம் -(41)
பரமன் -(63,73)
பரன் -(43)
பரிபாகு -(53)

| | |
|---|---|
| பவக்கடல் | -(37) |
| பவமாரணம் | -(38) |
| பழவடியார் | -(25) |
| பழவினை | -(58) |
| பற | -(50) |
| பன்மை | -(60) |
| பனிமதி | -(11) |
| பனை | -(61) |
| பாகா | -(48) |
| பாசம் | -(03,48,52,73) |
| பாசனமிசை | -(53) |
| பாதகர் | -(16) |
| பாதி | -(33) |
| பாய்மரம் | -(38) |
| பாரதம் | -(0.1) |
| பால்வளர் | -(59) |
| பாலன் | -(54) |
| பாவகதி | -(19) |
| பான் | -(86) |
| பிணி | -(07,47,50,52,53,58,60,82) |
| பிணிக்குடல் | -(55) |
| பிணைமுலை | -(55) |
| பித்தர் | -(35) |
| பித்தன் | -(20) |
| பிழை | -(73) |
| பிறை | -(68) |
| புகலன் | -(72) |
| புகலிடம் | -(38) |

புகழ் -(16,84)
புகு -(06)
புகுந்தேன் -(07)
புதை -(44)
புரந்தருள் -(20)
புரம் -(75)
புரி -(56)
புரிசுழி -(27)
புலம் -(18)
புலவோன் -(17)
புலன் -(48)
புவி -(05)
புள்ளறிவாளன் -(70)
புளி -(68)
பூ -(29)
பூங்கழல் -(55)
பூடண -(13,15)
பூதி -(05)
பெம்மான் -(39)
பெருமான் -(39)
பெருவிரல் -(50)
பேரம்பலம் -(35)
பைந்தோகை -(04)
பொய் -(21,74)
பொருமான் -(39)
பொருமி -(57)
பொருள் -(14)
பொழில் -(83)

| | |
|---|---|
| பொற்கழல் | -(45) |
| பொறிகள் | -(48) |
| பொன்னுலகு | -(39) |
| போசனம் | -(53) |
| போற்றி | -(05,06,12,23,68,45,72) |
| மகமேரு | -(04,33) |
| மகள் | -(04) |
| மங்களநாயகி | -(18,44,48,64,65) |
| மங்களம் | -(10) |
| மங்களமான் | -(52) |
| மங்களேசுவரி | -(61) |
| மங்கை | -(12) |
| மங்கையம்பதி | -(13) |
| மங்கைவளர் | -(09,47,51,69) |
| மஞ்சை | -(28,59) |
| மஞ்ஞை | -(28) |
| மடல் | -(07) |
| மடவார் | -(24,81) |
| மடி | -(70) |
| மடுபால் | -(08) |
| மண்ணாடி | -(48) |
| மணி | -(02) |
| மத்தமர் | -(26) |
| மதமா | -(04) |
| மதி | -(0.1,03,32,69) |
| மந்தி | -(68) |
| மந்திரம் | -(23,56) |
| மயக்கை | -(06) |

மயல் -(24)
மயன்சிரசு -(31)
மயில் -(69)
மயேசன் -(76)
மயேசுரன் -(19)
மரித்து -(25)
மருந்து -(18)
மருள் -(14,86)
மலர் -(07,59,69)
மலைமான் -(38)
மலையான் -(34)
மழுக்கையான் -(48)
மழுப்புரம் -(49)
மறயவர் -(64)
மறவி -(06)
மறவேன் -(02)
மறியார் -(47)
மறுகாத -(25)
மறுமை -(60)
மறை -(11,59,60)
மறையோர் -(18,51)
மன் -(10)
மனம் -(08,13,20,24,40,86)
மனைவி -(14)
மனோகரன் -(12)
மாசு -(77)
மாணிக்கவாசகர் -(20)
மாதவன் -(31,68)

| | |
|---|---|
| மாந்தர் | -(41) |
| மாமணி | -(04) |
| மாமிடம் | -(15) |
| மார்பு | -(71) |
| மாலறிவான் | -(40) |
| மாலன் | -(54) |
| மாலை | -(50) |
| மாற்று | -(71) |
| மானம் | -(29) |
| மானிலம் | -(75) |
| மிட்சு | -(29) |
| மிடிய | -(16) |
| மிடியார் | -(46,82) |
| மின்னார்முலை | -(28) |
| மீன் | -(42) |
| முக்கண்ணன் | -(12,24) |
| முகம் | -(01) |
| முடி | -(01) |
| முத்தமிழ் | -(64) |
| முத்தொழில் | -(49) |
| முயல் | -(54) |
| முரலுமலர் | -(09) |
| முலுத்தர் | -(43) |
| முள் | -(41) |
| முளைத்து | -(18) |
| முன்மை | -(60) |
| முனிமாதர் | -(33) |
| முனிவர் | -(51) |

| | |
|---|---|
| மூடன் | -(23) |
| மூதூர் | -(64) |
| மெத்த | -(16.42) |
| மெய் | -(17) |
| மெய்ஞ்ஞனம் | -(46) |
| மெய்ஞ்ஞானியர் | -(18) |
| மேகம் | -(50) |
| மேதி | -(45) |
| மேலடர் | -(54) |
| மேவி | -(04,17,30,69) |
| மேற்றமிழ் | -(16) |
| மேனி | -(10) |
| மைவாய் | -(17) |
| மொழி | -(28,55) |
| மோகன | -(28) |
| யதள்பணி | -(15) |
| யானை | -(15,48) |
| யோகியர் | -(18) |
| வங்கயல் | -(52) |
| வஞ்சனை | -(14) |
| வடிவு | -(05) |
| வண்டு | -(22) |
| வண்தேன் | -(22) |
| வம்பு | -(22) |
| வயன்மால் | -(04) |
| வயிறு | -(43) |
| வருத்தம் | -(06) |
| வருபிணி | -(56) |

வல்வினை -(62)
வலம் -(44)
வலியவன் -(04)
வள்ளல் -(68)
வளர்கரும்பு -(50)
வளர்நுதல் -(57)
வளர்மங்கை -(60)
வளிச்சருகு -(24)
வளை -(43)
வன்பனை -(19)
வன்மை -(60)
வாடி -(28)
வாண்மனம் -(54)
வாய் -(17,21,44,49,66)
வாயு -(36,51)
வார்குழல் -(52)
வாவி -(69)
வாழ் -(19,46,58)
வாழ்வு -(46,48,50)
விடம் -(15,34)
விடை -(11,15,33)
விண்டலர் -(17)
விண்ணவர் -(59)
விதறி -(27)
விரவலர்கள் -(17)
விரும்பு -(08)
வில் -(04,76)
விழி -(08,28,48,50,52,54,56)

| | |
|---|---|
| விழிச்சசி | -(39) |
| விளக்கு | -(04) |
| விளங்குவயல் | -(03) |
| வின்சொல் | -(29) |
| வின்மை | -(60) |
| வினை | -(30,32,41,51) |
| வீறு | -(54) |
| வெச்சில் | -(43) |
| வெட்சியார் | -(30) |
| வெறி | -(71) |
| வென்றி | -(40) |
| வேட்கனலோசனர் | -(35) |
| வேடம் | -(02) |
| வேணி | -(03) |
| வேதவன் | -(68) |
| வேதன் | -(39) |
| வேயு | -(51) |
| வேலம் | -(28) |
| வேலன் | -(54) |
| வேழம் | -(51) |
| வேழமூர்த்தி | -(45) |
| வேள் | -(28,40,50) |
| வேள்வி | -(50,62) |
| வேளை | -(49) |
| வேற்றலர் | -(57) |
| வேற்றுமை | -(43) |

## பின்னிணைப்பு-3

# அருஞ்சொற்பொருள்

| *அருஞ்சொல்* | *பொருள்* | *பாடல்எண்* |
|---|---|---|
| அட்டமாசித்தி | அஷ்டமாத்தி (அணிமா, மகிமா, கரிமா, லகிமா, பிராத்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம்) | (22) |
| அடல் | போர் | (07) |
| அண்டர் | தேவர் | (34) |
| அம்பலம் | பலர்கூடும்வெளி | (15) |
| ஆகமம் | வேதசாஸ்திரம் | (05) |
| உமை | பார்வதி | (27) |
| உற்றவர் | சுற்றத்தார் | (43) |
| கயவர் | கொடியவன் | (21) |
| கழை | மூங்கில், தண்டு | (52) |
| காமன் | இந்திரன் | (66) |
| குரம்பை | உடல் | (06) |

| | | |
|---|---|---|
| கூற்றம் | யமன் | (66) |
| சரபம் | சிங்கத்தைக் கொல்லவல்லதாகக் கூறப்படும் எண்காற்புள் | (30) |
| சாத்திரம் | வேதாந்தம், தர்க்கம் முதலிய நூல் | (68) |
| சிரசு | தலை | (31) |
| செகம் | உலகம் | (10) |
| செம்மல் | சிவன் | (65) |
| செவி | காது | (22) |
| தாரணி | பூமி | (84) |
| திருமுறைகள் | தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருமந்திரம், பதினோராந் திருமுறை, பெரியபுராணம் என்ற சைவ நூல்கள். | (9, 55) |
| தேகம் | உடம்பு | (68) |
| நகை | சிரிப்பு | (43) |
| நமன் | யமன் | (40) |
| நானம் | வாசனைப் பண்டம் | (29) |

| | | |
|---|---|---|
| நிட்களம் | உருவமின்மை | (05) |
| நித்திலம் | முத்து | (17) |
| நின்மலம் | மாசின்மை | (05) |
| நீற்றரை | சுண்ணாம்புக் காளவாய் | (57) |
| நுதல் | நெற்றி | (57) |
| நேத்திரம் | கண் | (57) |
| பாதகம் | பெரும்பாவம் | (16) |
| பிணி | நோய் | (47) |
| பித்தன் | சிவபக்தன் | (20) |
| புல்லறிவாளன் | அறிவினன் (அறிவு இல்லாதவன்) | (70) |
| புலவோன் | ஆத்துமா | (17) |
| பூதி | திருநீறு | (05) |
| பொழில் | பெருமை | (83) |
| போசனம் | உணவு | (53) |
| மஞ்சை | மயில் | (28) |
| மடவார் | மகளிர் | (24) |
| மதமா | யானை | (04) |

| | | |
|---|---|---|
| மதலை | குழந்தை | (44) |
| மதி | சந்திரன் | (32) |
| மந்திரம் | ஆலோசனை | (23) |
| மயல் | ஆசை | (81) |
| மருள் | மயக்கம் | (14) |
| மறை | இரகசியம், வேதம், பெண்குறி | (60) |
| மறையோர் | பிராமணர் | (18) |
| முத்தொழில் | படைப்பு காப்பு அழிப்பு என்ற கடவுளின் மூவகைச் செயல் | (49) |
| மூடன் | அறிவிலான் | (23) |
| மெய்ஞ்ஞானி | தத்துவஞானி | (18) |
| மேதி | எருமை | (45) |
| யோகியர் | சன்னியாசி | (18) |
| வாவி | நீர்நிலை | (69) |
| விரவலர்கள் | பகைவர்கள் | (17) |
| வையம் | பூமி, குதிரை பூண்டிழக்கும் இரதம், ஊர்தி | (75) |

## பின்னிணைப்பு-4

## சுவடி விவர அட்டவணை

| | | |
|---|---|---|
| சுவடி தலைப்பு | : | மங்கையந்தாதி |
| பொருள் | : | சிற்றிலக்கியம் |
| ஓலைச்சுவடி எண்ணிக்கை | : | 43 சுவடிகள் |
| பாடல் எண்ணிக்கை | : | 2+86 = 88 பாடல்கள் |
| ஆசிரியர் பெயர், காலம் | : | குறிப்பிடப்படவில்லை |
| சுவடியில் வரிகள் | : | ஒரு பக்கத்திற்கு 4 வரிகள். இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது. |
| நீளம் | : | 35 செ.மீ. |
| அகலம் | : | 2.5 - 2.8 செ.மீ. |
| சுவடியில் துளை அமைப்பு | : | இடது புறத்திலிருந்து 13செ.மீ. தொலைவில் ஒரு துளை மட்டும். |
| தாள் சுவடியின் பக்கங்கள் | : | 27 பக்கங்கள் |

தாள்சுவடி எழுதப்பட்ட ஆண்டு: 1954

| | | |
|---|---|---|
| சுவடி உள்ள இடம் | : | அரசினர் கீழ்திசை சுவடிகள் நூலகம், சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை-5. |
| சுவடியின் பதிவு எண்கள் | : | R. 5019 (ஓலைச்சுவடி)<br>R. 5341 (தாள்சுவடி) |
| நுவல் பொருள் | : | சைவத்தின் சிறப்பு - சிவபெருமான் தன்மை - சிவபெருமான் புரிந்த அருட்செயல்கள். |

# துணைநூற்பட்டியல்


சிற்றிலக்கியச் செல்வம் : ந.வீ. செயராமன், மணிவாசகர் நூலகம், சென்னை, பதிப்பு. 1979.

தமிழ் இலக்கிய வரலாற்றுக் களஞ்சியம் (முதல் தொகுதி) : மது.ச. விமலானந்தம், ஐந்திணைப் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு - டிசம்பர் 1987.

தமிழ்ப் பேரகராதி : சென்னைப் பல்கலைக் கழகம், மறுபதிப்பு 1982.

யாப்பருங்கலக்காரிகை : அமிர்தசாகரர், கழக வெளியீடு, 16ஆம் பதிப்பு, 1990.